Employment Exchanges.

*12 *Q.*—THIRU V. ISVARMURTI and THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Engineers with (*a*) graduate and (*b*) post-graduate qualifications who have registered their names with Employment Exchanges in the State for employment as on 20th August 1971?

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி & திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

20—8—1971 வரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ள (அ) பட்டப் படிப்பு (இ) பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்ற பொறியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 2,787 பேர்.

(இ) 33 பேர்.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, whether there is any downward trend in the number of graduates enrolled in the Employment Exchanges and if there are better employment prospects for them just at present?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பொறியியல் துறையில் ஏராளமான இன்ஜினியர்கள் இருக்கிறார்கள் என்றுதான் அரசாங்கத்தின் புள்ளி விவரம் கூறுகிறது.

THIRU G. SWAMINATHAN : There is a new philosophy in certain States like West Bengal, Assam and Orissa that only sons of the soil should get employment opportunity in those States. May I know whether due to that there has been any increase in the number of unemployed Graduates in our State? If so, what is the attitude of the Government in this matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் கருத்துக்கள் சொல்லக்கூடாது, பாலிஸியைச் சொல்லக் கூடாது. 20—8—1971 ஆம் தேதி வரையில் 2,787 பேர் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பின்னால் சமீபத்தில் மேற்கு வங்காளத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய நாடு எல்லாம்

1972 ஆகஸ்டு 9]

ஒரே நாடாக இருக்கிறது என்று சொல்கின்ற ஒரு கட்சியினுடைய ஆட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள்தான், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று ஒரு தனிச் சட்டம் என்று சொல்லி வருகிருர்கள். இது எது வரையில் உண்மை, எப்படிச் செயல்படுத்தப் போகிருர்கள் என்பதையெல்லாம் பின்னல் பார்த்து அதன் அடிப்படையில் இந்திய ஒற்றுமையைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

THIRU D. SANTOSHAM : I would like to know whether there has been unemployment among the Engineers, particularly among Civil, Mechanical and Electrical Engineers. If so, would any step be taken to tackle the problem of each category separately?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னல் அப்படி இருந்தது. முதலில் சிவில் இன்ஜினியர்கள் அதிகமாக இருந்தார்கள். அதற்குப் பின்னல் மெக்கேனிகல் இன்ஜினியர்கள் எண்ணிக்கை அதிகமாகப் பெருகியது. இப்பொழுது மெக்கேனிகல் இன்ஜினியர்கள் 1,138, சிவில் இன்ஜினியர்கள் 212 பேர். மெக்கேனிகல் இன்ஜினியரிங் அதிகமாகப் படித்திருக்கிருர்கள். இப்பொழுது தொழிற்சாலைகள் கூடுதலாகி வருவதால், அவர்களுக்கு நல்ல வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன.

THIRU K. S. ABDUL WAHAB : The Hon. Minister informed us that on 20th August 1971, there were more than 2,000 Engineers unemployed. I want to know the figure one year before, Sir.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1970-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது 2,539.

* 13 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of trained teachers of all categories, who have registered their names with the Employment Exchanges as on 20th August 1971; and

(b) among them the number of teachers whose names are still on the Live Register of the Employment Exchanges for more than two years?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயிற்சி பெற்ற எல்லா வகை ஆசிரியர்களிலும் எத்தனை பேர் 20—8—1971 வரையில் வேலை வாய்ப்பு நிறுவனத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்?